# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 13.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 4076/F/2024</u>**

திரு.S.K.சிவகுமார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
எண்.130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-04. .. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.S.K.சிவகுமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.P.பிரபாகரன், கண்காணிப்பாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மயிலாப்பூர், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 03/01/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் நொச்சிநகர் வாரிய குடியிருப்பில் ETRP அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின் கீழ் 628 குடியிருப்பு கட்டுவதற்காக முன் எத்தனை வாரிய குடியிருப்பு இருந்தது. அதில் ஒரு கட்டமைப்புக்கு ஒரு குடியிருப்பு என எத்தனை வாரிய குடியிருப்புகளுக்கு 628 குடியிருப்பில் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதில் ஒரு கட்டமைப்புக்கு 1+1, 1+2 என எத்தனை குடியிருப்புகள் வழங்கப்பட்டது

அதன் பெயர்கள் அடங்கிய பட்டியல் என்பன போன்ற தகவல்களை 9 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். அதனைப் பெற்ற உரிய பொது அதிகார அமைப்பு தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 19.02.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 21.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 30.03.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 26.09.2024 தேதியிட்ட கடிதம் மூலம் முதல் மேல்முறையீட்டு அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்றும் சரியான தகவலை பெற்று தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டு அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல எனக் கருதி இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் 19.02.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு சட்ட பிரிவு 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள இனம்1(I முதல் iv), 5 (v,vi,viii,ix), 6 (vi,viii,x) ஆகிய இனங்களுக்கு உரிய சரியான முழுமையான தகவலை மனுதாருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றை**

**இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுதகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4076/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
எண்.130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-04.

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்**,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
எண்.130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-04.
**(தற்போதைய பொதுதகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.சிவக்குமார்,
எண்.93,A, பிளாக் நொச்சிநகர்,
மயிலாப்பூர்,
சென்னை-04.

**<u>நகல்</u>**
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சென்னை-5.

Copy to file: KR/PA